DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Case No. | CC . 259/2010 |
| Deposition of Witness for | Prosecution Pw 8 |
| Name | கிருஷ்ணமூர்த்தி |
| Father / Husband Name | வேலுச்சாமி |
| Village | மேட்டுப்பட்டி |
| Taluk | சிவகங்கை |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 16th October 2023.

---

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை:-**

1) நான் மேட்டுப்பட்டியில் குடியிருந்து வருகின்றேன். நான் டைல்ஸ் வேலை செய்து வருகின்றேன். கடந்த 04.07.2010 ம் தேதி பகல் 05.30 மணியளவில் நானும், அ.சா.7 ம் தொண்டி ரோட்டில் அன்னை இல்லம் அருகே நின்று கொண்டிருந்த போது காளையார்கோவில் காவல் நிலைய போலிசார் எங்கள் இருவரையும் அழைத்து விபத்து சம்பந்தமாக எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்ததற்கு நாங்கள் சாட்சியாக கையொப்பம் செய்தோம்.

2) என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம்

சம்பவ இடத்தில் வைத்து எங்கள் முன்னிலையில் தயார் செய்தவை தான். அ.சா.ஆ. 4 பார்வை மகஜரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். என்னுடன் சேர்த்து ஜேம்ஸ் என்பவரும் 1வதாக சாட்சி கையொப்பம் செய்தார். போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

1) நான் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் தெரியும் என்றால் விபத்து நடந்தது பற்றி எழுதியிருந்தார்கள் 10 ஆண்டுகள் ஆனாதால் தற்சமயம் மறந்துவிட்டது. அன்றைய தினம் எவ்வளவு நேரம் அந்த இடத்தில் நின்று கொண்டிருந்தோம் என்றால் கூட்டம் குறையும் வரை அங்கேயே தான் நாங்கள் நின்று கொண்டிருந்தோம். சம்பவம் நடப்பதற்கே முன்பே அந்த இடத்திற்கு சென்றோமா என்றால் ஆமாம் விபத்தை நான் நேரடியாக பார்த்தேன்.

2) **நீதிமன்ற கேள்வி** - என்ன பார்த்தீர்கள் என்றால் முன்னால் இருவர், பின்னால் இருவர், நடுவில் ஒரு 40 வயது மதிக்கத்தக்க பெண் நடந்து கொண்டிருந்தார் கிராவல் லோடு ஏற்றிக் கொண்டு வந்த டிப்பர் லாரி வளைவில் திரும்பும் போது அந்த பெண்ணின் மீது லாரி சாய்ந்து விட்டது. லாரியில் இருந்த மணல் முழுவதும் அந்த அம்மா மீது கொட்டி மூடிவிட்டது சம்பவ இடத்திலேயே அந்த பெண்மணி இறந்துவிட்டார். அந்த லாரியை ஓட்டி வந்த டிரைவர் தப்பி ஓடினார் அவரை அங்கிருந்த நபர்கள் விரட்டி பிடித்து வந்தார்கள். அதன் பின்னர் போலிசார் வந்தனர்.

3) ஆஜர் எதிரியைத் தெரியாது. சம்பவ இடம் அபாயகராமான வளைவான இடம் என்றால் ஆமாம். என்னிடம் போலிசார் கையொப்பம் வாங்கும் போது நேரம் என்ன என்றால் 06.00 மணியிருக்கும். நான் கையொப்பம் செய்யும் போது கூட்டம் அதிகமாக இருந்ததா என்றால் ஆமாம். நான் எத்தனை பேப்பரில் கையொப்பம் செய்தேன் என்றால் 1 பேப்பரில் தான் கையொப்பம் செய்தேன்.

4) சம்பவ இடத்திற்கு வடக்கு பக்கம் என்ன இருந்தது என்றால் ஞாபகமில்லை. சம்பவ இடத்திற்கு தெற்கு பக்கம் என்ன இருந்தது என்றால் கண்மாய் கரை இருந்தது. சம்பவ இடத்திற்கு கிழக்கு பக்கம் என்ன இருந்தது என்றால் போஸ்ட்

மரம் இருந்தது. சம்பவ இடத்திற்கு மேற்கு பக்கம் என்ன இருந்தது என்றால் வளைவு பகுதியாக இருந்தது.

2) நான் சொல்வது போல் நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றாலும் சரியல்ல.

**(ஓம்)திருமதி.J.அனிதா கிறிஸ்டி, 16.10.2023**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**சிவகங்கை.**

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1,
**சிவகங்கை.**